பெற்றோர்கள் வழிகாட்டி

# *Zippy's Friends*

## Partnership for Children

# 1

# நல்ல

# உடல்நலம்

நாம் நம் பிள்ளைகளின் உடல்நலத்தில் அதிகக் கவனம் செலுத்துகிறோம் – அவர்கள் நன்றாகச் சாப்பிடுவதை உறுதிசெய்கிறோம், குளிரும்போது அவர்களுக்குப் போர்த்திவிடுகிறோம், விளையாட்டுகளில் ஈடுபட்டு உடலை உறுதியாக வைத்திருக்க அவர்களை ஊக்குவிக்கிறோம்.

ஆனால், அவர்களின் மனநலத்தில் நாம் போதுமான கவனம் செலுத்துகிறோமா – அவர்களைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறாரகள்? மற்ற பிள்ளைகளுடன் எப்படிப் பழகுகிறார்கள்? சிரமங்களையும் ஏமாற்றங்களையும் எப்படிச் சமாளிக்கிறாரகள்?

நம் மகிழ்ச்சிக்கும் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதற்கும் மனநலம் மிகவும் முக்கியம். மற்றவர்களோடு பழகுவதிலும் சிரமங்களைச் சமாளிப்பதிலும் வெவ்வேறு அணுகுமுறைகளை எப்படிக் கையாளலாம் என்பதைச் சின்னஞ்சிறிய பிள்ளைகள்கூட கற்றுக்கொள்ளலாம்.

இக்கையேடு *Zippy's Friends* எனும் திட்டத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இத்திட்டம் 5 முதல் 7 வயது பிள்ளைகளுக்கு மேற்கூறிய திறன்களைப் பள்ளியில் வளர்த்துக்கொள்ள உதவுகிறது. உங்கள் பிள்ளை இத்திட்டத்தின்போது என்ன கற்றுக்கொள்வார் என்பதோடு உங்கள் மகன் அல்லது மகள் இத்திட்டத்திலிருந்து முழுப்பயன் பெற நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதையும் இக்கையேடு விவரிக்கிறது.

‘சிரமங்களை எப்படிச் சமாளிப்பதென்று இளம் பிள்ளைகளுக்கு நாம் கற்றுக்கொடுத்தால், அவர்கள் இளையர்கள் மற்றும் பெரியவர்கள் ஆனதும், அவர்களால் பிரச்சனைகளையும் சிரமங்களையும் இன்னும் நன்றாகச் சமாளிக்க முடியும்.’

- *பால் ரூபன்ஸ்டைன், தலைவர்*
*Partnership for Children*

# சிரமமான
## காலங்களைச் சமாளித்தல்

நாம் அனைவரும் – பெரியவர்களும் சரி, பிள்ளைகளும் சரி – வாழக்கையில் பிரச்சனைகளையும் சிரமங்களையும் சந்திக்கிறோம்.

பெரியவர்களிடையே கருத்து வேறுபாடுகளும் சச்சரவுகளும் சகஜம். வேலையிடத்தில் நாம் மகிழ்ச்சியில்லாமலோ பாதுகாப்பில்லாமலோ இருக்கலாம். காதல் கண்ணீரில் முடியலாம். குடும்ப உறுப்பினர் காலமாகலாம். நம் மனதில் உள்ள உணர்ச்சிகளை உள்ளவாறு வெளிப்படுத்த நாம் அடிக்கடித் திணறுகிறோம்.

சிரமங்களையும் ஏமாற்றங்களையும் சமாளிக்க பயனுள்ள வழிகள் கிடைத்தால், நம் மனதிற்கு ஆறுதல் கிடைக்கிறது. பிரச்சனை நம்மை எதிர்கொள்ளும்போது, எவ்வளவு தீர்வுகளை நம்மால் யோசித்துச் செயல்படுத்த முடிகிறதோ அவ்வளவுச் சிறப்பாக நம்மால் அப்பிரச்சனையைச் சமாளிக்க முடியும் என ஆய்வு காட்டுகிறது.

பிள்ளைகளுக்குக் கூட சிரமமான காலங்களைப் பற்றி நன்றாகவே தெரியும். பலவிதமான சிரமங்களை அவர்களும் அனுபவிக்கிறாரகள். விளையாட்டு மைதானத்தில் சண்டை, தம்பி தங்கையைப் பார்த்து பொறாமை போன்ற அன்றாட நிகழ்வுகள். அல்லது பள்ளி மாற்றம், அச்சுறுத்தல் (bullying) போன்ற பெரிய பிரச்சனைகள்.

வழிமுறைதான். எவ்வளவு தீர்வுகளை அவர்களால் தேர்வு செய்து செயல்படுத்தமுடியுமோ அவ்வளவு சிறப்பாக அவர்களால் அப்பிரச்சனையை வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும்.

புதிய வழிகளைக் கற்றுக்கொள்வது போன்றவற்றை 5, 6 வயது பிள்ளைகள்கூட புரிந்துகொள்ளமுடியும் என்பதை அனுபவம் காட்டுகிறது. தொடக்கப் பள்ளியின் ஆரம்ப ஆண்டுகளில் அவர்களால் இதைச் செய்யமுடிந்தால், வாழக்கை முழுதும் அவர்களுக்குக் கைகொடுக்கக்கூடிய திறன்களை அவர்களால் கற்றுக்கொள்ள முடியும்.

வாழ்க்கையின் ஏமாற்றங்களையும் சவால்களையும் சிறப்பாகச் சமாளித்தல், கட்டொழுங்கைக் கடைப்பிடித்தல், வலுவான நீண்டநெடிய உறவுகளை அமைத்துக்கொள்ளுதல், மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கை வாழ்தல் ஆகியவற்றுக்கும் பள்ளிப்படிப்பில் சிறப்பாகச் செய்வதற்கும் அவ்வளவு தொடர்பு இல்லை என ஆராயச்சி காட்டுகிறது.

பள்ளிப்படிப்பில் சிறப்பாகச் செய்வது முக்கியம். அதைப் போலவே, ஒரு பிள்ளையின் மனநலத்தைப் பேணுவதும் முக்கியம்.

அதனால்தான் பிள்ளைகள் *Zippy's Friends* வழி பலன் அடைகிறார்கள் – அன்றாடம் எதிர்நோக்கும் சிரமங்களைச் சமாளிக்கவும் இன்னும் மகிழ்ச்சியாக வாழவும் உதவும் திறன்களை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

**எந்தப் பள்ளிப் பிள்ளைகள் தங்களைப் பற்றியும் தங்கள் சக மாணவர்களைப் பற்றியும் உயர்வாக நினைக்கிறார்களோ, அந்தப் பள்ளிப் பிள்ளைகளே கல்வியிலும் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை நிரூபிக்க ஆதாரம் உண்டு.**

'பிள்ளைகள் மற்ற பிள்ளைகளுடனும் ஆசிரியர்களுடனும் பழகும் விதத்தையும் அன்றாட வாழக்கைப் பிரச்சனைகளைச் சமாளிக்கும் விதத்தையும் இத்திட்டம் மேம்படுத்தியுள்ளது எனப் பொதுவான கருத்து நிலவுகிறது.'

– *ஆய்வு அறிக்கை*

'பெரியவர்களைப் போலவே சிறுவர்களுக்கும் தங்களது உணர்ச்சிகளைப் பற்றியும் பிரச்சனைகளைப் பற்றியும் பேச அவசியம் உள்ளது என்பதை இப்போது நான் உணர்கிறேன்.'

- *ஆசிரியர்*

# *Zippy's Friends*

## என்றால் என்ன?

*Zippy's Friends* பலதரப்பட்ட ஆற்றலுடைய சிறுவர்களுக்கான திட்டம். இத்திட்டம் குறிப்பிட்ட பிரச்சனைகளோ சிரமங்களோ உள்ள பிள்ளைகளின் மீது மட்டும் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக, இத்திட்டம் எல்லா சிறுவர்களின் மனநலத்தையும் மேம்படுத்துகிறது. இத்திட்டம் பள்ளிகளிலும் பாலர் பள்ளிகளிலும், வாரம் ஒரு முறை என்ற வீதத்தில், 24 வாரங்களுக்குப் கற்பிக்கப்படுகிறது. இதனைக் கற்றுக்கொடுக்க உங்கள் பிள்ளையின் ஆசிரியருக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

*Zippy's Friends* திட்டத்தில் 6 பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு கதை உண்டு. சிப்பி (Zippy) எனும் கதாபாத்திரத்தைப் பற்றி நீங்கள் நிறையவே கேள்விப்படுவீர்கள்! அவன் ஒரு விதமான பூச்சி. சில சிறுவ சிறுமியர் அவனது நண்பர்கள். சிறுவர்களுக்குப் பரிச்சயமான பிரச்சனைகளைக் கதைகள் சித்தரிக்கின்றன – நட்பு, நண்பர்கள் ஆவதும் பிரிவதும், அச்சுறுத்தல் (bullying), மாற்றத்தையும் இழப்பையும் சமாளித்தல் மற்றும் புதிய தொடக்கம். ஒவ்வொரு கதையும் வண்ண ஓவியங்களின் வழி சொல்லப்படுகிறது. ஓவியம் வரைதல், நடிப்பு, விளையாட்டுகள் போன்ற நடவடிக்கைகளும் உள்ளன. இத்திட்டம் 5 முதல் 7 வயது சிறுவர்களுக்காகவே வரையப்பட்டுள்ளது. பிள்ளைகளும் இத்திட்டத்தை மிகவும் விரும்புவதாக அனுபவம் காட்டுகிறது.

## இத்திட்டம் பிள்ளைகளுக்குப் பின்வருவனவற்றைக் கற்றுக்கொடுக்கிறது:

- உணரச்சிகளை அடையாளம் கண்டு அவற்றை வெளிப்படுத்துவது
- சொல்ல விரும்புவதை எப்படிச் சொல்வது
- எப்படிக் கவனமாகக் கேட்பது
- எப்படி உதவி கேட்பது
- எப்படி நண்பர்கள் ஆவது, எப்படி நண்பர்களைத் தக்க வைத்துக்கொள்வது
- எப்படித் தனிமையையும் தோல்வியையும் சமாளிப்பது
- எப்படி மன்னிப்பு கேட்பது
- எப்படி அச்சுறுத்தலைச் சமாளிப்பது
- எப்படிச் சச்சரவுகளைத் தீர்ப்பது
- எப்படி மாற்றத்தையும் இழப்பையும் (இறப்பு உட்பட) சமாளிப்பது
- எப்படிப் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுவது
- எப்படி மற்றவர்களுக்கு உதவுவது

*Zippy's Friends,* பிள்ளைகள் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லாது. மாறாக, சுயமாக யோசித்துப் பிரச்சனைகளுக்குச் சொந்தமாக தீர்வுகாண அது ஊக்குவிக்கிறது. தங்களுக்கு உதவுவதோடு மற்றவர்களுக்கும் மரியாதை செலுத்தும் தீர்வுகளைத் தேர்ந்தெடுக்கப் பிள்ளைகள் பழகுகின்றனர்.

*Zippy's Friends* பற்றி மேலும் தெரிந்துகொள்ள:
www.partnershipforchildren.org.uk

6

# சற்றுக் கூர்ந்து பார்ப்போம்

*Zippy's Friends* 4 பாகங்கள் அடங்கிய 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தலைப்ப உண்டு. உங்கள் பிள்ளை என்ன கற்றுக்கொள்வார என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவற்றைப் பற்றி இங்கு சுருக்கமாகச் சொல்கிறோம்.

## பகுதி 1 – உணர்வுகள்

பிள்ளைகள் உணர்வுகளைப் பற்றிக் கலந்துரையாடத் தொடங்குவர் – கவலை, மகிழ்ச்சி, கோபம், பொறாமை மற்றும் பதட்டம். பல்வேறு சூழ்நிலைகளில் அவர்கள் என்ன உணர்கிறார்கள் என்பதைச் சொல்ல பழகுவதோடு மனநிலையை மேம்படுத்திக்கொள்ள என்ன வழி என்பதையும் ஆராய்வார்கள்.

## பகுதி 2 – தொடர்புகொள்ளுதல்

இந்தப் பகுதி எப்படிச் சிறப்பாகத் தொடர்புகொள்வது என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கும். மற்றவர்கள் பேசும்போது கூர்ந்துகேட்கக் கற்றுக்கொடுக்கும். எப்படி உதவி கேட்பது, சிரமமான சூழ்நிலைகளிலும் சொல்ல விரும்புவதை எப்படிச் சொல்வது என்பதையும் கற்றுக்கொடுக்கும். அமைதியான பிள்ளைகள் கூட இவ்வகுப்புகளில் மனம்திறந்துப் பேசத் தொடங்குவர்.

## பகுதி 3 – உறவுகளை அமைத்துக்கொள்வதும் முறிப்பதும்

இதில் பிள்ளைகள் நட்பைப் பற்றிக் கற்றுக்கொள்வர் – எப்படி நட்புக் கொள்வது, எப்படி நண்பர்களைத் தக்க வைத்துக்கொள்வது, எப்படித் தனிமையையும் ஏமாற்றத்தையும் சமாளிப்பது. எப்படி மன்னிப்பு கேட்பது, வாக்குவாதத்திற்குப் பிறகு நண்பருடன் எப்படிச் சமரசம் செயதுகொள்வது ஆகியவற்றைப் பயிற்சி செய்வர்.

## பகுதி 4 – சச்சரவுக்குத் தீர்வு காணுதல்

இப்பகுதி சச்சரவுகளை எப்படித் தீர்ப்பது என்பது பற்றியது. இதனால் பிள்ளைகள் தங்களுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகளை இன்னும் சிறப்பான முறையில் தீர்த்துக் கொள்கிறார்கள் என்பது ஆசிரியர்களின் கருத்து. குறிப்பாக, அச்சுறுத்தல் பிரச்சனை (bullying) மற்றும் அவர்களோ அல்லது மற்றவர்களோ அச்சுறுத்தப்பட்டால் என்ன செய்யலாம் என்பதைப் பற்றியும் இப்பகுதி கூறும்.

## பகுதி 5 – மாற்றத்தையும் இழப்பையும் சமாளிப்பது

இந்தப் பகுதி பெரிய மற்றும் சிறிய மாற்றங்களை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியது. மாற்றங்களிலே மிகப் பெரிய மாற்றம் ஒருவரின் இறப்பு. பொதுவாகப் பெரியவர்கள் இறப்பைப் பற்றிப் பேச மிகவும் சிரமப்படுவார்கள். ஆனால், பிள்ளைகளுக்கு அப்படியில்லை. பெரியவர்கள்கூடப் பேசச் சங்கடப்படும் விஷயத்தைப் பற்றி மனம் திறந்துப் பேசக்கூடிய வாய்ப்பை பிள்ளைகள் வரவேற்கிறார்கள். ஒரு வகுப்பின்போது அவர்கள் இடுகாட்டிற்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர். ஆச்சரியவசமாக, இத்திட்டத்தின் மிகவும் வெற்றிகரமான வகுப்பாக இது மதிப்பிடப்பட்டுள்ளது.

## பகுதி 6 – நாம் சமாளிப்போம்

பிரச்சனைகளைச் சமாளிக்க, மற்றவர்களுக்கு உதவ மற்றும் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மாற பல்வேறு வழிகளை ஆராய்வதன் வழி பிள்ளைகள் கற்றுககொண்ட அனைத்தையும் இறுதிப் பகுதி உறுதிப்படுத்துகிறது. இறுதி வகுப்பு ஒரு கொண்டாட்டம். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு கிரீடத்தையும் ஒரு சான்றிதழையும் பெறுவார்.

7

# பலன் அளிக்குமா?

*Zippy's Friends* முழுமையாகச் சோதிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை வரைய ஆறு ஆண்டுகளுக்கு மேலானது. ஐரோப்பா, ஆசியா, லத்தின் அமேரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் இத்திட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

டென்மாரக் மற்றும் லித்துவேனியாவில் கலந்துகொள்வதற்கு முன்பும் பின்பும் ஆசிரியர்களும் பிள்ளைகளும் பேட்டி காணப்பட்டனர். அதோடு, அவர்கள் வினாத்தாள்களையும் பூர்த்தி செய்தனர். அவற்றின் முடிவுகள் இத்திட்டத்தில் கலந்துகொள்ளாத பிள்ளைகளின் முடிவுகளோடு ஒப்பிடப்பட்டன.

இத்திட்டத்தில் கலந்துகொள்ளாத பிள்ளைகளோடு ஒப்பிடும்பொழுது, *Zippy's Friends* திட்டத்தில் கலந்துகொண்ட பிள்ளைகள் ஒத்துழைப்பு, வலியுறுத்துதல், சுயக்கட்டுப்பாடு மற்றும் அனுதாபாம் காட்டுவதில் முன்னேற்றம் காட்டியதோடு, பிரச்சனைக்குரிய நடத்தையையும் குறைத்துக்கொண்டனர்.

எல்லாவற்றையும்விட மேலாக, *Zippy's Friends* திட்டத்தில் கலந்துகொண்ட பிள்ளைகள் இன்னும் சிறந்த வழிமுறைகளைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டனர். எடுத்துக்காட்டாக,

- மன்னிப்பு கேட்பது
- உண்மை பேசுவது
- நண்பரிடம் பேசுவது
- பிரச்சனையைப் பற்றி யோசிப்பது
- அமைதியாக இருக்க முயற்சி செய்வது

ஆத்திரம் அடைதல், நகங்களைக் கடித்தல், குரலை உயர்த்திப் பேசுதல் போன்ற பயனற்ற வழிமுறைகள் குறைந்தன. இத்திட்டம் சிறுவர், சிறுமியர் இருபாலருக்கும் சமமாகப் பயன் அளித்தது.

லித்துவேனியாவில் நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வு பிள்ளைகள் தாங்கள் கற்றுக்கொண்ட புதிய திறன்களை ஒரு வருடம் வரை நினைவில் வைத்திருந்ததாகக் காட்டியது.

வகுப்பறையில் உள்ள சச்சரவுகளை குறைக்கவும் தங்கள் மாணவர்களை மேலும் நன்றாகப் புரிந்துகொள்ளவும் இத்திட்டம் உதவியதாக பல ஆசிரியர்கள் கூறினர். *Zippy's Friends* தங்கள் சொந்தப் பிரச்சனைகளைச்

பல்வேறு மதிப்பீட்டு ஆய்வுகளைப் பற்றி மேலும் படித்துத் தெரிந்துகொள்ள:

www.partnershipforchildren.org.uk

‘72 விழுக்காட்டுப் பெற்றோர்கள் இத்திட்டத்தில் கலந்துகொண்டதன் பயனாகத் தங்கள் பிள்ளைகளின் நடத்தையில் மாற்றங்களைப் பாத்தனர். பிள்ளைகள் இன்னும் வெளிப்படையாகப் பேசினர், நண்பர்களின் மதிப்பை உணர்ந்தனர், மற்றவர்களின் உணர்வுகளுக்கு மேலும் மதிப்பளிதது அக்கறை செலுத்தினர், கலகலப்பாகவும் உண்மையாகவும் பழகினர் மற்றும் மற்றவர்களைப் புரிந்துகொள்ளத் தொடங்கினர்.’

- லித்துவேனியப் பெற்றோர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வு

‘பிள்ளைகளைப் பற்றி எவ்வளவு குறைவாக தெரிந்துவைத்திருந்தேன் என்பதை இந்தத் திட்டத்தின் வழி நான் உணர்ந்துகொண்டேன். பிள்ளைகளுடன் எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம் என இப்பொழுது எனக்குத் தோன்றுகிறது.’

- ஆசிரியர்

# நீங்கள் என்ன செய்யலாம்

*Zippy's Friends* பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களால் கற்றுக்கொடுக்கப்பட்டாலும், உங்கள் பிள்ளை இத்திட்டத்தின்வழி மேலும் பயன் அடைய நீங்களும் உதவலாம்.

இதோ ஆறு பரிந்துரைகள்.

- *Zippy's Friends* தொடங்குவதற்கு முன்பு பல ஆசிரியர்கள் பெற்றோர்களுடான சந்திப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்வார்கள். சுந்திப்பில் கலந்துகொள்ளுங்கள், இத்திட்டத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள் மற்றும் கேள்வி கேளுங்கள்.

- உங்கள் பிள்ளை எப்பொழுது ஒரு குறிப்பிட்ட தலைப்பைப் பற்றி கலந்துரையாடுவார் என்பதை முன்கூட்டியே நீங்கள் அறிய, கால அட்டவணை ஒன்றையும் கேளுங்கள். கற்றுக்கொண்டதை வீட்டில் மறுவுறுதிப்படுத்த இது உங்களுக்கு உதவும்.

- பிள்ளைகள் தாங்கள் வரைந்த படங்கள் அல்லது பாடத்தின் முடிவில் பூர்த்திசெய்த எளிய கருத்துச் சேகரிப்புத் தாள்களை அடிக்கடி வீட்டிற்கு எடுத்துச் செல்வர். அவற்றில் ஆர்வம் காட்டி அன்றையப் பாடத்தைப் பற்றி உங்களிடம் பகிரந்துகொள்ள உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள்.

- உங்கள் பிள்ளையின் பள்ளியுடன் அணுக்கமான தொடர்பு வைத்திருங்கள். உங்கள் குடும்பச் செய்திகள் எவற்றைப் பற்றியேனும் உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடம் தெரிவிக்க விரும்பினால், ஆசிரியரிடம் பேசுங்கள்.

- உங்கள் பிள்ளை முரட்டுத்தனம் குறைந்து, அதிகச் சகிப்புத்தன்மையும் பிரச்சனைகளைத் தீர்க்கும் ஆற்றலும் உடையவராக இருப்பதை நீங்கள் கவனிக்கலாம். இந்த நல்ல மாற்றங்களைப் புகழுங்கள்.

- உங்கள் பிள்ளை நிறைய பேசத் தொடங்குவார். அதற்குத் தயாராகுங்கள். அவர் பேசுவதைச் செவிமடுக்கவும் தயாராகுங்கள்!

பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் *Zippy's Friends* திட்டத்தின்வழி மகிழச்சியும் பலனும் அடைந்திருக்கிறார்கள். உங்கள் பிள்ளையும் அவ்வாறே பலன் அடைவார் என நாங்கள் நம்புகிறோம்.

'இத்திட்டம் எங்கள் குடும்ப வாழ்க்கையை வெகுவாக மாற்றியுள்ளது. என் பிள்ளைகள் அனைவரும் இப்பொழுது ஒருவர் பேசும்பொழுது மற்றவர்கள் நன்றாகச் செவிமடுத்து கேட்கின்றனர்.'

\- *தாயார்*

'அனனக்குத் தெரிந்த சில பெரியவர்கள்கூட இத்தகையப் பயிற்சிக்குச் சென்று பயன் அடையலாம்.'

\- தலைமையாசரியர்

**Partnership for Children**

**26-27 Market Place,
Kingston upon Thames, Surrey KT1 1JH, England
Tel 44 (0) 20 8974 6004
Fax 44 (0) 20 8974 6600
www.partnershipforchildren.org.uk
e-mail info@partnershipforchildren.org.uk**

© 2008 Partnership for Children & Health Promotion Board. All rights reserved.